ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-68) Mar (2) / 2010



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ………………………………………………………………….......9

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ………………………………………….……....15

4. ஸ்ரீவசனபூஷணம்…………………………………………………………….....18

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)……….…………………………………...25

6. திருமாலை ……………………………………………………………………....31


Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 45)

## 243. ஸத்க்ருத:

ஸாதுக்களால் பூஜிக்கப்படுபவன். தனது அடியார்கள் எத்தனை சிறிய வஸ்துவைத் தனக்குச் சமர்ப்பணம் செய்தாலும், தனது மேன்மைக்கு ஏற்றபடி அவர்கள் மிகப் பெரியதாகவே சமர்ப்பணம் செய்ததாக எண்ணி மகிழ்கிறான். கீழே உள்ள வரிகள் காண்க:

- ஸாத்த்வத ஸம்ஹிதை – அஹோ ஹி ஏகாந்திந: ஸர்வாந் பரீணாத பகவான் ஹரி: விதி ப்ரயுக்தாம் புஜாம் ச க்ருஹ்ணாதி சிரஸா ஸ்வயம் – தன்னிடம் மட்டுமே நின்று மற்ற தெய்வங்களை நாடாமல் உள்ளவர்கள் அனைவரையும் ஸ்ரீஹரி மகிழ்விக்கிறான். அவர்கள் செய்யும் பூஜையைத் தனது திருமுடியால் ஏற்றுக்கொள்கிறான்.

- இராமாயணம் பாலகாண்டம் (1-59) - சபர்யா பூஜித: ஸம்யக் – சபரியால் நன்றாகவே பூஜிக்கப்பட்டான்.

- விஷ்ணுபுராணம் (5-19-29) - மாலாகாரணே பூஜித: - மாலை கட்டுபவரால் வணங்கப்பட்டான்.

## 244. ஸாது:

தனது அடியார்களின் விருப்பத்திற்கும் வேண்டுகோளுக்கும் ஏற்ப தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் போன்ற செயல்களைக் கூட செய்பவன். இதனால் ஸாது எனப்பட்டான். உணாதி சூத்திரம் – க்ரு வா பா ஜி ஸாத் - போன்ற தாதுக்களின் இறுதியில் “உ” என்பது சேர்க்கப்பட்ட வேண்டும் – என்றது.

## 245. ஜஹ்நு:

தனது பக்தர்களாக இல்லாதவர்களிடம் தனது மேன்மைகள் அனைத்தையும் மறைத்துக் கொள்பவன். இதனையே ஜஹ்நு என்ற பதம் கூறுவதாக நிருக்தம் படித்தவர்கள் பொருள் உரைப்பார்கள். மஹாபாரதம் உத்யோகபர்வம் (6-72) – சக்ரம் தத் வாஸுதேவஸ்ய மாயயா வர்த்ததே விபோ ஸாபஹ்நவம் பாண்டவேஷு சேஷ்டதே ராஜஸத்தம் – வாஸுதேவனின் வியக்கவைக்கும் சக்தி மூலமாக அவனது சக்கரம் யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் இருக்கும்; ஆக பாண்டவர்கள் உள்ளிட்ட அவனுடைய அடியார்களுக்கு அனைத்தையும் செய்கிறான் – என்றது காண்க.

## 246. நாராயண:

இது ஒரு ப்ரத்யேகமான திருநாமம் ஆகும். இது ஸஹஸ்ரநாமத்தில் ஒருமுறை மட்டுமே கூறப்பட்டது. அவனது மேன்மையை உணர்த்த உபநிஷத்துக்களில் மீண்டும் மீண்டும் இந்தத் திருநாம்ம் பலமுறை கூறப்படுகிறது. இது மற்ற தேவதைகளைக் குறிப்பிடாத திருநாமம் ஆகும். கீழே உள்ள பல வரிகளைக் காண்க:

- தைத்திரீய நாராயணவல்லீ (6-1-26) - நாராயணாய வித்மஹே – நாராயணனை உபாஸனை செய்கிறோம்
- தைத்திரீயம் (6-11) – நாராயண பரம் ப்ரஹ்ம: - நாராயணனே பரப்ரஹ்மம்
- மஹோபநிஷத் - ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் - நாராயணன் மட்டுமே முதலில் இருந்தான்

- மஹோபநிஷத் – அத புந: ஏவ நாராயண: - அதன் பின்னர் மீண்டும் நாராயணன்
- ஸுபால உபநிஷத் (6) - சக்ஷு: ச த்ரஷ்டவ்யம் ச நாராயண: - காண்கின்ற கண்களும், அந்தக் கண்களால் காணப்படும் பொருளும் நாராயணனே
- ஸுபால உபநிஷத் (6) - அத திவ்யோ தேவ: ஏக: நாராயண: - திவ்யமான ஒருவன் நாராயணனே

உபநிஷத்தில் நாராயண என்ற பதத்திற்குப் பின்வருமாறு பொருள் கூறப்பட்டது. தைத்திரீயம் – யத் ச கிஞ்சித் – இந்த உலகில் எவை பார்க்கப்பட்டும், கேட்கப்பட்டும் உள்ளானவோ அவை அனைத்தின் உள்ளும் புறமும் நாராயணன் வ்யாபித்துள்ளான் – என்றது. இப்படியாக இந்தத் திருநாமத்தின் பல விளக்கங்கள் உள்ளன. இந்தத் திருநாமம் ஆறு கண்கள் மூலம் அறியக்கூடாது என்பதால் நாம் இதற்கு மேல் விளக்கவில்லை (ஆறு கண்கள் என்றால் என்ன? உபதேசிக்கும் ஆசார்யனின் இரண்டு கண்கள், உபதேசம் பெற வந்துள்ள சிஷ்யனின் இரண்டு கண்கள். இப்படியாக நான்கு கண்களால் மட்டுமே அறிந்து கொள்ளவேண்டும் என்பதால், நான்குக்கு மேற்பட்ட கண்கள் மூலம் அறிய இயலாது என்று கருத்து).

## 247. நர:

(அடுத்து உள்ள 25 நாமங்கள் மூலம் நாராயணன் என்ற திருநாமத்தின் மேன்மையை அருளிச்செய்கிறார்). இத்தனை மேன்மைகள் கொண்ட நாராயண என்பதை மறைமுகமாக நர: என்ற திருநாமம் மூலம் விளக்குகிறார். அதாவது அழிவில்லாமல் உள்ள சேதனம், அசேதனம் என்ற இரு செல்வங்களைக் கொண்டவன்.

## 248. அஸங்க்யேய:

அவனுக்கு கட்டப்பட்ட சேதனம் மற்றும் அசேதனம் ஆகியவை எண்ணில் அடங்காதவை ஆகும். இதனால் இவனும் எண்ணற்றவன், அளவற்றவன் ஆகிறான்.

## 249. அப்ரமேயாத்மா

சேதனமும் அசேதனமும் எண்ணற்றவை என்பதால், அவற்றின் உள்ளும் புறமும் வ்யாபித்துள்ள இவனும் எண்ணற்றவன் ஆகிறான்.

## 250. விஷிஷ்ட:

எல்லையற்ற சேதனம் மற்றும் அசேதனம் ஆகியவற்றின் உதவியை நாட வேண்டாதபடி தானே மிகுந்த மேன்மை கொண்டவனாக அவன் உள்ளான்.

## 251. சிஷ்டக்ருத்

தந்து அடியார்கள் அனைவரும் தன்னுடன் சேர்வதற்கு ஏற்ற உயர்ந்த குணங்கள் கொண்டவர்களாகச் செய்கிறான்.

## 252. சூசி: (157)

தோஷங்கள் ஏதும் இல்லாத தனது தூய்மையான ஸ்வபாவம் முலம் அவன் ஒளிர்ந்தபடி உள்ளதால் மற்றவர்கள் அளிக்கின்ற ஒளி மூலம் ப்ரகாசிக்கின்ற அவசியம் இல்லாமல் தானாகவே ஒளிர்கிறான்.

## 253. ஸித்தார்த்த:

தான் விரும்பும் அனைத்தும் தாமாகவே வந்து அமையும்படி உள்ளவன். இதனால் ஸித்தார்த்தன் என்ற திருநாமம் கொண்டான். தனக்கு வேண்டியது அனைத்தும் முன்னரே கொண்டவன் ஆவான்.

## 254. ஸித்தஸங்கல்ப:

தான் மற்றவர்களுக்கு அடிபணிந்து நிற்கவேண்டிய அவசியல் இல்லாமல் சுதந்திரமாகச் செயல் புரியும் தன்மை கொண்டவன். தனது விருப்பம் மூலம் மட்டுமே நிறைவேறியுள்ள சிந்தனை கொண்டவன். சாந்தோக்ய உபநிஷத் (8-1-5) - ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: – விரும்பியவற்றை உடனே அடைபவன், இதனால் ஸத்யஸங்கல்பனும் ஆவான் – என்றது.

## 255. ஸித்தித:

அணிமா, கரிமா உள்ளிட்ட எட்டு வகையான சித்திகளை அளிப்பவன். இதனால் ஸித்திதன் எனப்படுகிறான்.

## 256. ஸித்திஸாதந:

அவனது உபாஸனம் என்பதே அவன் போன்று இன்பமாக உள்ளதால், அவன் ஸித்திஸாதநன் எனப்படுகிறான். கீதையில் (12-20) – யே து தர்ம்ய - என்னையே பலனாக எண்ணி உபாஸனை செய்பவர்கள் எனக்கு ப்ரியமாக உள்ளனர் - என்றான்.

## 257. வ்ருஷாஹீ

அவனை அண்டிய அந்த நாள் முதலாகவே அனைத்துவிதமான மங்களங்களுக்கும் விதை இடுவது போன்று தர்மத்தை அளிக்கின்ற ரூபமாகவே உள்ளான். அஷ்டாத்யாயீ - ராஜ அஹஸ் ஸகிப் யஷ்டச் - ராஜன், அஹன், ஸகின் என்ற பதங்களில் ஏதேனும் ஒன்று இறுதியில் வந்தால் டச் என்பதைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- விஷ்ணுபுராணம் – (5-17-3) - அத்ய மே ஸபலம் ஜன்ம ஸுப்ரபாதா ச மே நிசா – இன்று எனது வாழ்க்கையின் பலன் அடந்தேன். எனது வாழ்வின் இரவு நீங்கியது.

- விஷ்ணுபுராணம் – தா: நிசா: தே ச திவஸா - நான் என்றெல்லாம் க்ருஷ்ணனைக் காணவில்லையோ அன்று அனைத்தும் இரவே, இனி அவனுடன் உள்ள நாட்கள் மட்டுமே பகல் பொழுதுகள்.

- தைத்திரீயம் – யதாஹி ஏவ ஏஷ: … அதஸ: அபயம் கதோ பவதி – எப்போது உபாஸகன் காண இயலாத அவனைக் குறித்த நினைவிலேயே உள்ளானோ, அப்போதே அவன் ஸம்ஸார பயம் நீங்கப் பெறுகிறான்.

## 258. வ்ருஷப:

ஸம்ஸாரம் என்ற நெருப்பினால் எரிக்கப்பட்டு, தன்னிடம் பக்தியுடன் வந்தவர்களைத் தனது குளிர்ந்த கடாக்ஷம் என்னும் அமிர்த மழையால் வாழச் செய்கிறான். இதனால் வ்ருஷப: என்ற திருநாமம் பெற்றான். உணாதி சூத்திரம் - ருஷி: வ்ருஷிப்யாம் கித் - ருஷி, வ்ருஷி என்பதால் பின்னால் அப் என்ற ப்ரத்யயமும், கித் என்ற ப்ரத்யயமும் சேர்கிறது – என்றது (வ்ருஷ் + அபச் + அ = வ்ருஷப:)

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

…தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 68)

## அத்யாயம் - 4 - நான்காம் பாதம் – முக்தி பாதம்

### அதிகரணம் -1- ஸம்ப்த்யாவிர்பாவாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - முக்தி பெற்ற நிலையில் முக்தாத்மா தனது இயல்பான ஸ்வரூபத்தின் விளக்கத்தை அடைந்துவிடுகிறான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

4-4-1 ஸம்பத்ய ஆவிர்பாவ: ஸ்வேந சப்தாத்

**பொருள்** - ப்ரஹ்மத்தை அடைந்து பெறுவது ஆவிர்பாவரூபமே; ஸ்வேந என்ற பதம் காரணமாக ஆகும்.

**விஷயம்** - பரமாத்மாவை உபாஸிப்பவர்களுக்கும், ப்ரக்ருதியில் இருந்து விடுபட்ட ஆத்மாவை "இந்த ஆத்மா தனது ஆத்மாவாக ப்ரஹ்மத்தைக் கொண்டது" என்ற சிந்தனையுடன் உபாஸனை செய்பவர்களுக்கும் "மீண்டும் திருபுதல்" என்பது இல்லாமல் உள்ள அர்ச்சிராதி மார்க்கம் மூலமாகச் செல்வது உரைக்கப்பட்டது. இப்படியாகப் பரமபதம் செல்லும் அந்த முக்தாத்மாக்கள் பெறும் செல்வம் எத்தகையது என்று கூறத் தொடங்குகிறார். சாந்தோக்ய உபநிஷத் (8-12-3) - ஏவமேவைஷ ஸம்ப்ரஸாத: அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே - கீழே உரைத்தபடி உபாஸனை செய்த ஜீவன் தனது உடலை விட்டு வெளிக்கிளம்பி, பரமபதத்தில் உள்ள ப்ரமாத்மாவை அடைந்து, ஸம்ஸார நிலை கழியப் பெற்று, தனது இயல்பான நிலையைப் பெறுகிறான் – என்றது.

**சந்தேகம் -** இங்கு ப்ரஹ்மத்தை அடைந்த ஜீவனுக்குத் தனது இயல்பான ஸ்வரூபம் விளங்கப் பெறுதல் என்பது நிகழ்கிறதா? அல்லது ஸ்வர்க்கம் போன்றவற்றில் உள்ள தேவர்கள் போன்ற ரூபங்களை அடைவது போன்று ப்ரஹ்மத்தை அடைந்த பின்னர் புதிதாக ஒரு ரூபம் உண்டாகிறதா? இதில் எது சரி?

**பூர்வபக்ஷம்** – புதிதாக ஒரு ரூபம் உண்டாகிறது என்றே கொள்ளவேண்டும். இப்படிக் கொள்ளவில்லையென்றால், சாஸ்த்ரங்கள் புருஷார்த்தமாக இல்லாதவற்றை உரைப்பதாக ஆகிவிடும். ஆழ்ந்த உறக்கத்தின்போது, உடல் மற்று இந்த்ரியங்களின் இயக்கங்கள் இல்லாதபோது, ஆத்மஸ்வரூபத்திற்கு ஆனந்தம் போன்ற புருஷார்த்தம் ஏதும் இல்லை என்பதை உணரலாம். மேலும் பரஞ்ஜோதியை அடைந்த ஜீவனுக்கு அவனது "துக்கத்தின் நீக்கம்" என்பதே புருஷார்த்தம் என்றும் கூற இயலாது. இதன் காரணம், முக்தி பெறும் ஜீவனுக்கு அதிக சுக அனுபவம் உண்டு என்பதை ச்ருதிகள் உரைக்கின்றன. உதாரணமாகக் கீழே உள்ள வரிகள் காண்க:

- தைத்திரீயம் (2-8) - ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: ச்ரோத்ரி யஸ்ய ச அகாமஹதஸ்ய – அது மட்டுமே ப்ரஹ்மத்தின் ஆனந்தம்; வேதங்களில் வல்ல அந்தணன் போகங்களுக்கு ஏங்குவதில்லை.

- தைத்திரீயம் (2-7) - ரஸம் ஹி ஏவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி - ரஸ ஸ்வரூபனாகிய பரமாத்மாவை அடைந்த ஜீவன் ஆனந்தம் கொண்டவன் ஆகிறான்.

எல்லையற்ற ஆனந்தம் என்பதைத் தனது ஸ்வரூபமாக ஆத்மா கொண்டுள்ளது என்பதால், இத்தகைய ஆனந்த ஸ்வரூபம் என்பது ஸம்ஸாரத்தின் காரணமாக ஏற்பட்ட அறியாமையால் மறைவு அடைகிறது, பரஞ்ஜோதியை அடைந்தவுடன் அந்த மறைவு விலகி ஆனந்தம் வெளிப்படுகிறது என்றும் கூற இயலாது. ப்ரகாசமான ஞானம் என்பதன் மறைவு என்பது, அத்தகைய ஞானத்தின் அழிவு மட்டுமே என்று முன்னரே நாம் கூறியுள்ளோம். ப்ரகாசம் என்ற தன்மைக்கு மட்டுமே மறைவு ஏற்பட்டாலும், அந்த மறைவு நீங்குதல் என்பது உண்டானாலும், புருஷார்த்த ரூபத்வம் ஸ்வரூபத்திற்கு உண்டாகாது. ஆனந்த ஸ்வரூபத்வம் என்பது சுகமாக இருத்தல் என்பதும், இத்தகைய சுக ஸ்வரூபத்வம் என்பது ஆத்மாவிற்கு அநுகூலமாக இருத்தல் என்பதும் அல்லவோ?

ஆத்மா என்பது ப்ரகாசம் மட்டுமே என்று கூறுபவர்களின் கருத்தில் யாருடைய ப்ரகாசம் என்பது அநுகூலமாக உள்ளது என்று உணரப்படுகிறது? இதனைத் தெளிவாகக் கூற இயலாது என்பதால், ப்ரகாசமே ஆத்மாவின் ஸ்வரூபம் என்று கூறுபவர்களின் வாதத்தில் ஆனந்த ஸ்வரூபத்வம் என்பதைத் தள்ளிவிட இயலும்.

மேலும் பரம்பொருளைஅடைந்தவுடன் தனது ஸ்வரூபத்தை மட்டுமே அடைகிறான் என்று கூறினால், அந்த ஸ்வரூபம் அப்போது நித்யமாக உள்ளதால், சாந்தோக்ய உபநிஷத் (8-3-4, 8-12-3) – ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே - ஸ்வரூபம் உண்டாகிறது – என்பது போன்ற வரிகள் வீணாகக்போகும். ஆகவே முக்தாத்மா ஒரு புதிய சரீரத்துடன் தொடர்பு கொள்கிறான் என்றே கொள்ளவேண்டும். இதன் மூலம் மட்டுமே – அபிநிஷ்பத்யதே – வெளிப்படுகிறது - என்ற பதம் பொருள் கொண்டதாகிறது.

மேலும் - ஸ்வேந ரூபேண – தனது ஸ்வரூபத்துடன் – என்ற பதங்கள், அபிநிஷ்பத்யதே – வெளிப்படுகிறது - என்பதுடன் ஒன்றாக இணைகிறது. அவனுக்கே உரித்தான ஆனந்தம் என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

**ஸித்தாந்தம்** – பரஞ்ஜோதியான பரம்பொருளை அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்று அந்தந்த ஜீவனுக்குத் தனது ஸ்வரூபத்தின் விளக்கம் ஏற்படுகிறது என்றே கூறவேண்டும், புதிதாக ஓர் உருவம் எடுப்பதை மட்டுமே இந்த வரி கூறவில்லை. ஏன்? ஸ்வேந சப்தாத் – என்பதில் ரூப என்ற பதம் ஸ்வ என்பதன் மூலம் விசேஷமாக உணர்த்தப்பட்டதால் ஆகும். இங்கு ஜீவன் வேறு ஒரு புதிய சரீரத்தைப் பெறுகிறான் என்று கூறப்பட்டிருந்தால், ஸ்வேந ரூபேண என்ற பதங்கள் பொருளற்றவை ஆகும். ஆக அந்த ஜீவன் ஞானம் விரிவு பெற்ற நிலை என்னும் ஸ்வரூப விளக்கம் அடைகிறான்.

### 4-4-2 முக்த: ப்ரதிஜ்ஞாநாத்

**பொருள் -** விடுபட்ட ஸ்வரூபமே, இப்படியே உறுதியாகிறது.

**ஸித்தாந்தம்** – (கடந்த சூத்திர பூர்வபக்ஷத்தில், அபிநிஷ்பத்யதே என்பது வீணாகப்போகும் என்ற வாதம் உள்ளது காண்க. இதற்கு விடை தருகிறார்) சாந்தோக்ய உபநிஷத் (8-12-3) – ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே – தனது ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான் - என்ற வரியின் மூலம், கர்மம் காரணமாக உண்டான சரீரத்தின் தொடர்பு நீங்கப் பெற்று, தனது இயல்பான ஸ்வரூபத்துடன் உள்ளான் என்பது உணர்த்தப்படுகிறது. ஆகவே ஸ்வரூபம் என்பது எப்போதும் இருப்பது என்றாலும், கர்மத்தின் தொடர்பு காரணமாக மறைவாக இருந்த அந்த ஸ்வ்ரூபம், தனது மறைவு நீங்கப்பெற்று வெளிப்படுவதே இங்கு அபிநிஷ்பத்யதே என்று கூறப்படுகிறது. ஏன்? ப்ரதிஜ்ஞாநாத் - இவ்விதம் உறுதிபட உரைப்பதால் ஆகும். இப்படியாக உறுதிபடக் கூறப்பட்டது என்பதை எவ்விதம் அறியலாம்?

சாந்தோக்ய உபநிஷத் (8-7-1) – ய ஆத்மா - எந்த ஓர் ஆத்மா - என்று தொடக்கத்தில் ப்ரத்யகாத்மா கூறப்பட்டு; எந்த ஓர் ஆத்மா விழிப்பு உள்ளிட்ட மூன்று நிலைகளில் இருந்தும் விடுபட்டவனாகவும், விருப்பமானவை மற்றும் விருப்பம் அற்றவை ஆகியவற்றுக் காரணமான கர்மங்கள் காரணமாக உண்டான சரீரத் தொடர்பு நீங்கப் பெற்றவனாகவும் உள்ளான் என்பதைக் கூறுவதற்காகவே இந்த வரி தொடங்கியது. இந்தக் கருத்தை உணர்த்த சாந்தோக்ய உபநிஷத் (8-9-3) - ஏதம் த்வேவ தே பூய: அநுவ்யாக்யாஸ்மி – முன்பு கூறப்பட்ட ஆத்மாவைப் பற்றி மீண்டும் கூறுகிறேன் - என்ற திரும்பத் திரும்பக் கூறியது. அதன் பின்னர் சாந்தோக்ய உபநிஷத் (8-12-3) – ஏவம் ஏவ ஏஷ ஸம்ப்ரஸாத: அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே - அந்த பரஞ்ஜோதியை அடைந்த பின்னர், இந்த சரீரத்திலிருந்து விடுபட்ட அவன் தனது ஸ்வரூப விளக்கம் அடைகிறான் - என்று கூறப்பட்டது. இதன் மூலம் கர்மத்தின் தொடர்புடன் கூடியவனுக்கு பரஞ்ஜோதியான பரமாத்மாவை அடைந்து கர்மத்தின் தொடர்பு நீங்குதல் என்பதான முக்தியே, ஸ்வேந ரூபேண அபிநிஷபத்யதே - ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான் – என்று கூறப்பட்டதாக உணர்த்தப்படுகிறது. “இந்தப் புலன், இந்தக் காரணத்தினால் தெளிவாகிறது” என்று கூறுவது போன்று, அபிநிஷபத்யதே என்பது ஆத்ம ஸ்வரூபம் விளங்கப்பெறுகிறது என்று கூறுகிறது.

**பூர்வபக்ஷம்** - தூக்கம் முதலான நிலைகளில் உள்ள ஆத்ம ஸ்வரூபம் ஆனந்தமயமாகக் காணப்படுவதில்லை. ஆகவே அந்த நிலையில் புருஷார்த்தமாக ஆத்மாவிற்கு ஏதும் கைகூடுவதில்லை. இது போன்றே முக்தி பெற்ற நிலையில்

ஜீவன் தனது ஸ்வரூப விளக்கத்தை நிரந்தரமாகப் பெற்று விடுகிறான் என்று மோக்ஷ சாஸ்த்ரங்கள் கூறுவது விருப்பத்தகுந்த புருஷார்த்தமாக இருக்க இயலாது அல்லவா? ஆகவே அபிநிஷ்பத்யதே என்பதன் மூலம், மற்றோர் உருவம் எடுப்பதே கூறப்பட்டது (இதற்கான விடையை அடுத்த சூத்திரத்தில் கூறுகிறார்).

4-4-3 ஆத்மா ப்ரகரணாத்

**பொருள் -** ப்ரகரணம் மூலமாக அறியலாம்.

**ஸித்தாந்தம்** (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - இந்த ஆத்மாவானவன் தனது இயல்பாகவே பாவங்கள் நீங்கிய தன்மை தொடக்கமாக, ஸத்யஸங்கல்பம் உள்ளிட்ட எட்டு தன்மைகளுடன் கூடியவன் என்றே அந்த ப்ரகரணத்தில் கூறப்பட்டது அல்லவோ? இதனைச் சாந்தோக்ய உபநிஷத் (8-7-1) - ய ஆத்மா அபஹதபாப்மா, விஜர: விம்ருத்யு: விசோக: விஜிகத்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: - ஆத்மாவானது பாவங்கள் அற்றது, கிழத்தன்மை அற்றது, மரணம் அற்றது, சோகம் அற்றது, பசி அற்றது, தாகம் அற்றது, தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறப் பெற்றது, தளராத மனம் கொண்டது – என்றது காண்க. இதுவே ப்ரஜாபதியின் உபதேசத்தினுடைய தொடக்க வரியாக உள்ளது. இந்த வரியானது பரமாத்மா குறித்து அல்ல, ஜீவாத்மாவைக் குறித்தே உள்ளது என்பதை ப்ரஹ்மசூத்திரம் (1-3-18) - உத்தராச்சேத் ஆவிர்ப்பூத ஸ்வரூப வஸ்து – என்பதை விளக்கும்போது விளக்கியாகிவிட்டது.

இப்படிப்பட்ட பாவங்கள் நீங்கப் பெற்ற தன்மை உள்ளிட்ட எட்டுத் தன்மைகளுடன் கூடிய ஆத்மாவே தனது கர்மத்தின் தொடர்பு காரணமாக ஸ்வரூபம் மறைக்கப்பட்டு உள்ளான். அவன் பரஞ்சோதியான பரமாத்மாவை அடந்த பின்னர் தனது ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான். ஆகவே இயல்பாகவே பாவங்கள் நீங்கப் பெற்ற தன்மை உள்ளிட்ட பலவற்றைக் கொண்ட ஆத்மாவிற்கு, அந்தத் தன்மைகள் பரமாத்மாவை அடைந்தவுடன் மறைவிலிருந்து வெளிப்படுகின்றன அல்லாமல் புதிதாக உண்டாவதில்லை. இதனை சௌனக பகவான் கீழே உள்ளவாறு உரைக்கிறார்:

யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே:
தோஷப்ரஹாணாந் ந ஜ்ஞாநமாத்மந: க்ரியதே ததா
யதோதபாநகாணாத் க்ரியதே ந ஜலாம்பரம்
ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத:
ததா ஹேய குணத்வம்ஸாத் அவபோதாதயோ குணா:
ப்ரகாச்யந்தே ந ஜ்ஞாயந்தே நித்யா ஏவ ஆத்மாநோ ஹி தே

இதன் பொருள் - வைரம் போன்ற கற்களில் உள்ள அழுக்கை நீக்குவதால் அதற்குப் புதிதாக ஒளி உண்டாவதில்லை; இது போன்றே சரீர தொடர்பு காரணமாக ஏற்பட்ட தோஷங்களை நீக்குவதால் ஆத்மாவிற்குப் புதிதாக ஞானம் உண்டாகுவதில்லை; குளம் கிணறு போன்றவற்றை வெட்டும்போது அங்கு புதிதாக நீர் உண்டாவதில்லை, மறைந்திருந்த நீர் மீண்டும் வெளிப்படுகிறது; இது போன்று தாழ்வான குணங்கள் அனைத்தும் மோக்ஷம் அடையும்போது நீங்கிய பின்னர், ஞானம் போன்ற இயல்பான தன்மைகள் ஆத்மாவிடம் வெளிப்படுகின்றன, அவை புதிதாக உண்டாவதில்லை, அவை ஆத்மாவிடம் எப்போதும் உள்ளவை அல்லவோ?

ஆகவே கர்மங்கள் காரணமாகவும், அதன் காரணமாக உண்டான சரீரத்தின் தொடர்பு காரணமாகவும் ஞானம், ஆனந்தம் போன்றவை சுருங்கிய நிலையில் உள்ளன. இத்தகைய ஜீவன் பரஞ்ஜோதியான பரமாத்மாவை அடைந்து தனது கர்மங்கள் நீங்கப் பெற்றவுடன் விரிவடைதல் என்னும் வெளிப்படுதலை அடைகிறான். எனவே பரமாத்மாவை அடைந்த ஜீவன் தனது ஸ்வரூப விளக்கம் அடைகிறான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஸம்பத்யாவிர்பாவாதிகரணம் ஸம்பூர்ணம்

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 68)

**மூலம்** – ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்று ஸாமாந்யேந சொல்லச் செய்தேயும், ப்ராயச்சித்திரியம் ஸா அத்ர யத்புந: சரணம் வ்ரஜேத் என்று விசேஷிக்கையாலே புத்திபூர்வோத்தராகத்துக்கு ப்ரபத்த்யநந்தரம் ப்ராயச்சித்தமாக ப்ராப்தமாயிற்று.

**விளக்கம்** – கீதையில் (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாவங்களில் இருந்தும் விடுவித்து – என்று கூறினான். ஆயினும் லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17-91) - ப்ராயச்சித்திரியம் ஸா அத்ர யத்புந: சரணம் வ்ரஜேத் – அபராதம் உண்டானால் மீண்டும் எம்பெருமானைச் சரணம் புகுவதே ப்ராயச்சித்தம் – என்று கூறப்பட்டது. ஆகவே தெரிந்தே செய்கின்ற பாவங்களுக்கு மீண்டும் ப்ரபத்தி செய்வதே அதற்கான ப்ராயச்சித்தம் என்றாகிறது.

**மூலம்** – புந: சரணாகதியை விதிக்கிற வசநத்தை அடியிலே புத்தி பூர்வோத்தராகத்துக்கும் பரிஹாரமாக ப்ரபத்தி பண்ணாதார் விஷயத்திலே நியமித்தாலோ என்னவொண்ணாது; புத்திபூர்வோத்தராகத்தையும் பற்ற ப்ரபத்தி பண்ணலாமென்று விசேஷித்துக் கண்டோக்தி பண்ணுவதொரு வசநம் உண்டாகிலிறே இப்படி நியமிக்கலாவது? இப் ப்ரபத்தி பூர்வோத்தராகத்துக்கும் பரிஹாரமென்று அறிந்தால் இச்செட்டை விடுவாரையும் கிடையாமையாலே புந:ப்ரபத்திவசநம் நிர்விஷயமாம். ஸாமாந்யவசநத்தளவைப்பற்றி விசேஷவசநத்தை பாதிக்கவோண்ணாது. இப்படி விசேஷவசநத்தை பாதிக்கில் உபாஸநிஷ்டனுக்கும் பூர்வோத்தராகத்துக்கும் தோஷமில்லையாம்.

**விளக்கம்** – முதல் ப்ரபத்தி செய்யும்போதே, தான் பின் ஒரு காலத்தில் அறிந்தே செய்யும் பாவங்களுக்கான ப்ரபத்தியையும் சேர்த்துச் செய்யாதவர்களுக்கு மட்டுமே கடந்த பத்தியில் கூறியபடி “தெரிந்தே செய்த பாவங்களுக்கு ப்ராயச்சித்தம்

மீண்டும் சரணாகதி செய்தல்" என்று விதிக்க இயலாது. ஏன்? பின் ஒரு காலத்தில் அறிந்தே செய்ய உள்ள பாவங்களுக்கான ப்ரபத்தியையும் முதல் ப்ரபத்தி செய்யும்போதே சேர்த்துச் செய்யவேண்டும் என்று நேரடியாகக் கூறும் ப்ரமாணங்கள் இருந்தால் அல்லவோ இப்படிக் கூற இயலும். இப்படியாகப் பின்னர் செய்யப் போகும் பாவங்களுக்கான ப்ராயச்சித்தமாக முதலிலேயே ப்ரபத்தி செய்யலாம் என்று விதியிருந்தால், இப்படிப்பட்ட எளிமையான வாய்ப்பை யாரேனும் நழுவ விடுவார்களோ? ஆகையால் இது போன்று கூற இயலாது. ஒரு குறிப்பிட்ட விதி உள்ளபோது, அதனை ஒரு பொது விதி மூலம் தள்ள இயலாது. இப்படி ஒரு பொது விதியானது, குறிப்பிட்ட ஒரு விதியைத் தள்ள இயலும் என்று கூறினால், பக்தி நிஷ்டன் மற்றும் உபாஸனை நிஷ்டன் ஆகிய இருவருக்கும் அறிந்தே செய்கின்ற பாவங்களுக்குத் தோஷம் இல்லை என்றாகிவிடும்.

**மூலம்** – பூர்வோத்தராகத்திலும் பரமைகாந்திகளான இவர்கள் இருவருக்கும் யம வச்யதாதிகளில்லையென்னுமிடம்

யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந:
வஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே

இத்யாதி வசநபலத்தாலே ஸித்தம். ஒரு பாபந்தானே ஜாதிகுணாதி அதிகாரபேதத்தாலே குரு லகு பல பேதவத்தாயிருக்குமென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்நம். இவ்வர்த்தம் ராஜபுத்ராபராதிகளிற்போல லோகமர்யாதையாலும் உபபந்நம்.

ந ப்ராக்வத்புத்திம் பூர்வாதே ந சாத்யந்தமநுக்ரஹ:
லகுர்தண்ட: பரபந்நஸ்ய ராஜபுத்ராபராதவத்

ஆகையால் அதிகாராநுரூபமாக லகுபலமும் வாராமைக்காகப் புந:ப்ரபதநம் விதிக்கப்படுகிறது.

**விளக்கம்** – பக்தி நிஷ்டன் மற்றும் பரபந்நன் ஆகிய இருவரும் தெரிந்தே பாவங்களைச் செய்தாலும் இவர்கள் இருவருக்கும் யமனிடம் சிக்குதல் என்பது இல்லை (நரகம் இல்லை) என்னும் கருத்தை - யஸ்மிந் கஸ்மிந் குலே ஜாதா யத்ர குத்ர நிவாஸிந: வஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே – எந்தக் குலத்தில் பிறந்தாலும், எங்கு வாழ்ந்தாலும் எம்பெருமானிடம் எப்போதும் ஈடுபட்டபடி உள்ளவர்கள் யமலோகம் புகுவதில்லை – என்று கூறியதன் மூலம் காண்க. ஒரே பாவத்திற்கான தண்டனை என்பது குலம், ஒழுக்கம் போன்றவை காரணமாகச் சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் உள்ளதைப் பலரும் ஒப்புக்

கொள்வதைக் காணலாம். இந்தக் கருத்தை ராஜகுமாரர்கள் தவறு செய்தால் பெறும் தண்டனை மூலம் அறியலாம் (அவர்களுக்குத் தண்டனை குறைவாக இருக்கும்). இதனை - ந ப்ராக்வத்புத்திம் பூர்வாதே ந சாத்யந்தமநுக்ரஹ: லகுர்தண்ட: ப்ரபந்நஸ்ய ராஜபுத்ராபராதவத் – ப்ரபந்நன் ஒருவன் தனக்குத் தெரிந்தே பாவங்கள் செய்ய நேரிட்டால் அவனுக்கு ப்ரபத்திக்கு முன்னர் உள்ள நிலைமை போன்று அதிக தண்டனை அளிக்கப்படுவதில்லை; இதே போன்று அவனுக்கு எம்பெருமானின் அதிகமான க்ருபையும் கிட்டுவதில்லை; இப்படிப்பட்ட ப்ரபந்நனுக்கு அரசகுமாரன் போன்று குறைவான தண்டனையே கிட்டுகிறது – என்பதன் மூலம் உணரலாம். ஆக இந்தக் குறைவான தண்டனையும் கிட்டக்கூடாது என்பதற்காகவே மீண்டும் இவர்களுக்கு ப்ரபத்தி செய்தல் என்பது கூறப்பட்டது.

**மூலம்** – சிஷ்டதயா வ்யபதேச்யரான ஸமர்த்தருக்கு லோக ஸங்க்ரஹத்துக்காகவும் ப்ரஸித்த நிமித்தங்களில் யதாசக்தி ப்ரஸித்த ப்ராயசித்தம் உசிதம். அது தவிருகையும் முன் சொன்ன ஆஜ்ஞாதிலங்கநமாம். ஸைரந்திகைக்கு ஸேவை தப்பினபோது தாதாத்விகமான பரிமளாதிகளையும் இழந்து பயாநுபவமும் உண்டாமாப்போலே ஆஜ்ஞாதி லங்கநம் இரண்டுபடி அநர்த்தம்.

**விளக்கம்** – மிகுந்த ஞானம் மற்றும் ஒழுக்கம் உள்ளவர்களாக உள்ள சிலர் பலராலும் மதிக்கப்பட்டபடி இருப்பர். இவர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்கான ப்ராயச்சித்தம் என்பதை அனைவரது முன்னிலையிலும் செய்வதே சரியானதாகும். இதன் காரணம், மற்றவர்களுக்கு இவர்களது இச்செய்கை ஒரு உதாரணமாக இருக்கவேண்டும் என்பதால் ஆகும். இப்படிச் செய்யவில்லையென்றால் அது எம்பெருமானின் ஆணையை மீறுவதாகவே ஆகும். பெண்களின் கூந்தலை அழகுபடுத்தும் பெண் ஒருவள் ஏதோ ஒரு காரணத்தால் தண்டிக்கப்பட்டால் அவளுக்குக் கிட்டவேண்டிய ஊதியமான பரிமளங்களும் கிட்டுவதில்லை, மேலும் என்ன நடக்குமோ என்ற அச்சமும் உண்டாகிறது. ஆகவே எம்பெருமானின் ஆணைகளை மீறுவதன் மூலம் இரண்டுவிதமான தண்டனைகள் கிட்டலாம்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 24)

41. இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்.

**அவதாரிகை** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கி இவ்வளவும் – உபாய வரணாத்மிகையான ப்ரபத்தியினுடைய தேச காலாதி நியமாபாவமும் விஷய நியமமும் தர்சிப்பிக்கப்பட்டது; இப்படி விஷய விசேஷத்தை தர்சிப்பித்தவநந்தரம் பகவச்சாஸ்த்ராதி ஸித்தமான அதிகாரி விசேஷங்களையும் ப்ரகாசிப்பிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி அதிகாரி விசேஷத்தையருளிச்செய்கிறார் "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்று.

**விளக்கம்** – "ப்ரபத்திக்கு தேச நியமம்" என்று தொடங்கும் 23-வது சூர்ணை தொடங்கி இதுவரை உள்ள சூர்ணைகளில் ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றுதல் என்னும் ப்ரபத்திக்கு தேசம், காலம் போன்ற நியமங்கள் இல்லை என்றும், உபாயமாகப் பற்றப்படும் பொருளின் நியமமும் கூறப்பட்டன. இப்படியாக ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள வஸ்துவின் மேன்மைகளைக் கூரிய பின்னர், பாஞ்சராத்ரம் உள்ளிட்ட பல சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள அதிகாரிகளின் விசேஷங்கள் யாவை என்று விளக்க வேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டார். இந்தச் சூர்ணையில் அதிகாரிகளின் விசேஷத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஸௌலப்யாதி குணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியத விஷயமான இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் ப்ரபதந ஹேது பேதத்தாலே மூன்று வகைப்பட்டிருப்பர்களென்கை.

**விளக்கம்** – "இதில் ப்ரபத்தி பண்ணுமதிகாரிகள் மூவர்" என்பதன் மூலம் ஸௌலப்யம் உள்ளிட்ட பல திருக்கல்யாண குணங்கள் பரிபூர்ணமாக உள்ளதால் ப்ரபத்திக்கு விஷயமாக உள்ள அர்ச்சாவதாரம் கூறப்பட்டது. இந்த அர்ச்சையில் ப்ரபத்தி செய்யும் அதிகாரிகள், தாங்கள் ப்ரபத்தி செய்வதற்கான காரணங்கள் வேறுபடுவதால், மூன்று வகைப்பட்டிருப்பார்கள் .

42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திபரவசரும்.

**அவதாரிகை -** அவர்களாரென்றுமபேக்ஷையிலேயருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – அந்த அதிகாரிகள் யாவர் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – "அஜ்ஞராகிறார்" பகவல்லாபத்துக்கு உறுப்பாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாநமிலாதவர்கள். அஜ்ஞாநம் அசக்திக்குமுபலக்ஷணம். "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று" என்று மேலேயிவர் தானே அருளிச்செய்கிறாரிறே. "ஜ்ஞாநதிகராகிறார்" ஜ்ஞாந சக்திகள் உண்டாயிருக்கச் செய்தேயும், பகவதத்யந்த பரதந்த்ரமான ஸ்வரூப யாதாத்ம்ய தர்சநத்தாலே, உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தமென்று பரித்யஜிக்கைக்கீடான ஜ்ஞாந பூர்த்தி யுடையவர்கள். "பக்தி பரவசராகிறார்" ஒன்றையுமடைவுபட வநுஷ்டக்க க்ஷமரல்லாதபடி பகவத் ப்ரேமாதிசயத்தாலே சிதிலகரணரா யிருக்குமவர்கள்.

**விளக்கம்** – "அஜ்ஞராகிறார்" – எம்பெருமானை அடைவதற்கான உறுப்பாக உள்ள சாதனங்கள் எதனையும் கைக்கொள்ளத் தகுதியான ஞானம் இல்லாதவர்கள் ஆவர். அறிவில்லாமல் உள்ளனர் என்பதன் மூலம், ஆற்றல் இல்லாமலும் உள்ளனர் என்பது மறைமுகமாக உணர்த்தப்பட்டது. "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு மஜ்ஞாநாசக்திகளன்று" என்று இவரே சூர்ணை 115-ல் அருளிச் செய்ய உள்ளார். "ஜ்ஞாநாதிகர்" – ஞானம் மற்றும் சக்தி ஆகியவற்றைக் கொண்டவர்கள்; ஆயினும் தங்களது ஆத்மா தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவிதமான திறனும் அற்றது என்றும், பகவானால் மட்டுமே காப்பாற்ற இயலும் என்றும் அறிந்தவர்கள்; இப்படியாக ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிந்தவர்கள்; ஆகவே மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதமாக உள்ளவை என்று அறிந்ததால், அவற்றைக் கைவிடுவதற்கு ஏற்ற ஞானத்தைப் பூர்ணமாகக்

கொண்டவர்கள் ஆவர். "பக்தி பரவசராகிறார்" – எதனையும் தாங்களாகவே செய்யும் ஆற்றலைக் கொள்ளாமல், ஸர்வேச்வரனிடம் உண்டான ப்ரேமை காரணமாக, தங்களது செயல் மற்றும் சித்தம் போன்ற அனைத்தையும் அவனிடம் இழந்து நிற்பார்கள்.

43. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

**அவதாரிகை** - இப்படியிவ்வஜ்ஞாநாதிகளடியாக ப்ரபத்தி பண்ணினவர்களின்னாரென்னுமிடம் காணலாமிடமுண்டோவென்னுமாகாங்க்ஷையிலே யருளிச் செய்கிறார் "அஜ்ஞாநத்தாலே" என்று தொடங்கி.

**விளக்கம்** - இப்படியாக அஜ்ஞானம் தொடக்கமாக உள்ள மூன்று விதத்தினர் (ப்ரபத்தி செய்தவர்கள்) இவர்கள், இவர்கள் என்று எங்கு காணலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் என்றது, இதரோபாயாநுஷ்டாநத்திலிழிகைக் கீடான ஜ்ஞாநாதிகள் முதலிலே யில்லாமையாலே அநந்யகதிகளாய்க் கொண்டு பகவத் விஷயத்திலே பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி. (அஸ்மதாதிகள்) என்று – ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே மந்தாதிகாரிகளோடே தம்மையும் கூட்டி யருளிச் செய்கிறார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்றது - உபாயாந்தரங்கள் ஸ்வரூபநாசக மென்று நடுங்கும்படியான ஸ்வரூபயாதாத்ம்ய தர்சநத்தாலே வந்த ஜ்ஞாந பூர்த்தியாலே அநந்ய கதிகளாய்க் கொண்டு, ஸ்வரூபாநுரூபமாக பகவதி ந்யஸ்தபரரானவர்களென்றபடி. (பூர்வாசார்யர்களாகிறார்) நாத யாமுந யதிவராதிகள். (பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்) என்றது – பகவத்ப்ரேம பௌஷ்கல்யத்தாலே "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும், "இட்டகாலிட்டகை" என்றுஞ் சொல்லுகிறபடியே சிதிலகரணரா யிருக்கையாலே, ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளாய்க் கொண்டு அவன் பக்கலிலே பரஸமர்ப்பணம் பண்ணினவர்களென்றபடி. பக்தி பரவசர்க்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப் போகாதென்னுமிடம் "உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனுமல்லேன்" என்றும், "என் கொள்வன்" என்கிற பாட்டிலும் ஆழ்வார் ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

**விளக்கம்** - "அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம், மற்ற உபாயங்களைக் கைக்கொள்வதில் ஞானம் இல்லாத காரணத்தினால், மற்ற புகலிடம் ஏதும் இல்லாமல், பகவானிடம் பரந்யாஸம் செய்தவர்கள் கூறப்பட்டனர். "அஸ்மதாதிகள்" என்பதன் மூலம், தன்னைத் தாழ்வாகவே எண்ணியபடி உள்ளதால் மற்ற அதிகாரிகளுடன் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். "ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் மற்ற உபாயங்கள் அனைத்தும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை அழித்துவிடும் என்பதான நடுங்க வைக்கும் உண்மையை அறிந்தவர்கள்; இந்த உண்மையை உணர்ந்த காரணத்தினால் ஞானம் நிறையப் பெற்றவர்கள்; இதனால் வேறு புகலிடம் தங்களுக்கு இல்லை என்று உணர்ந்து, தங்களது ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி எம்பெருமானிடமே தங்களது பாரத்தை வைத்தவர்கள். "பூர்வாசார்யார்கள்" என்பது ஸ்வாமி நாதமுனிகள், ஸ்வாமி ஆளவந்தார், ஸ்வாமி எம்பெருமானார் போன்றவர்கள் ஆவர். "பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர்" என்பதன் மூலம் எம்பெருமானிடம் கொண்ட ப்ரேமையின் பூர்ணம் காரணமாக பெரியதிருவந்தாதி (34) – காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் – என்றும், திருவாய்மொழி (7-2-4) - இட்டகாலிட்டகை – என்றும் கூறுவது போன்று தங்களது உறுப்புக்கள் என்ன செய்கின்றன என்பதே தெரியாமல் உள்ளவர்கள்; இதனால் ஒரு குறிப்பிட்ட உபாயத்தைக் கைக்கொள்ளாமல், வேறு புகலிடம் இல்லாமல், அவனிடம் மட்டுமே சென்று பரஸமர்ப்பணம் செய்தவர்கள் ஆவர். பக்தி மற்றும் ப்ரேமை ஆகியவற்றின் காரணமாக எந்த ஒரு சாதனத்தையும் கைக்கொள்ளாமல் உள்ள நிலை ஏற்படும் என்பதைத் திருவாய்மொழி (5-7-2) – உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நானெங்குற்றேனு மல்லேன் – என்றும், திருவாய்மொழி (5-1-4) – என் கொள்வன் - என்றும் கூறியதன் மூலம் ஆழ்வார் தெளிவாக உணர்த்தினார் அல்லவோ?

44. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற.

**அவதாரிகை** - இப்படி அஜ்ஞாநாதிகளோரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகைக்கு மூலமின்ன தென்கிறார் (இப்படி என்று தொடங்கி).

**விளக்கம் -** இப்படியாக அஜ்ஞாநம் போன்ற மூன்றுக்குள் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒருவரின் ப்ரபத்திக்குக் காரணம் என்று கூறுவதன் மூலகாரணம் எது என்பதை அருளிச் செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிறவிவை மூன்றிலும், மூவர்க்கு மந்வய முண்டாயிருக்கச்செய்தே, ஒரொன்றே யிவர்களுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றில் ஒரொன்றே இவ்வதிகாரிகள் பக்க லுறைத்திருக்கையாலே யென்கை.

**விளக்கம் -** அஜ்ஞானம், ஆற்றல் இல்லாமல் இருத்தல்; ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிகின்ற ஞானம்; பகவத் ப்ரேமை ஆகிய மூன்றிலும் மூன்று விதமான அதிகாரிகளுக்குத் தொடர்பு இருக்கலாம். ஆயினும் இவற்றில் ஏதோ ஒன்று மட்டுமே இவர்களது ப்ரபத்திக்குக் காரணமாக இருக்கும். இந்த மூன்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே ஒவ்வொருவரிடமும் உறைந்திருக்கும்.

**வ்யாக்யானம் –** இத்தால், முற்பட்டவர்கள் பக்கல் ஜ்ஞாந பக்திகளிரண்டும் குறைந்து அஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; நடுவிலவர்கள் பக்கல், அஜ்ஞாந மல்பமாய் பக்தியுமளவு பட்டு ஜ்ஞாநமே விஞ்சியிருக்கும்; பிற்பட்டவர்கள் பக்கல், அஜ்ஞாநம் அத்யல்பமாய் ஸ்வரூப ஜ்ஞாநமுங் குறைவற்றிருக்கச்செய்தே, ப்ரேமமே கரைபுரண்டிருக்கும்; ஆகையால், எல்லா மெல்லார் பக்கலிலுமுண்டேயாகிலும் அல்பங்களானவை கிடக்கச்செய்தே அதிகமானதுவே அவ்வவர்க்கு ப்ரபதந ஹேதுவாமென்றதாய்த்து. இந்த யோஜநைக்கொரு குறையுண்டு. மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களுக்கும் அஜ்ஞானம் சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ள வேண்டி வருகையாலே, ஆனால் செய்வதென்னென்னில், (ஊற்றத்தைப் பற்ற) என்கிறவித்தை அநுஸந்தாந பரமாக்கி யோஜிக்குமளவி லிவ்விரோதமில்லை; அப்போது (இப்படி) இத்யாதிக்கு - அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத் பக்தியுமாகிற இம் மூன்றினுடையவு மநுஸந்தாநம் மூவர்க்கு மேதேனுமொருபடி யுண்டாயிருக்கச் செய்தே ஓரொன்றே யிவ்வதிகாரிகளுக்கு ப்ரபதந ஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றி லோரொன்றிலே யிவ்வதிகாரிகளுக் கூற்றமாகையாலே யென்று பொருளாகக்கடவது. அதாவது, அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக்குடலான அஜ்ஞாநாதி த்ரயாநுஸந்தாநமும் மூவர்க்கு முண்டானாலும், மூன்றிலும் வைத்துக்கொண்டு ப்ரசுரமானதே தந்தாமுக் கநந்யகதிகளாய் ப்ரபத்தியிலிழிகைக்கு ஹேதுவாக வநுஸந்தித் திருக்கையாலே யென்றபடி. இதில் ப்ரதமாதிகாரிகளுக்கு

அஜ்ஞாநாநுஸந்தாநம் ஸ்வரஸம்; நடுவு சொன்னவர்களுக்கு, ப்ராமணிகராகையாலே அஜ்ஞாநத்தினுடைய ஸவாஸந நிவ்ருத்தி கூடாமையால், அஜ்ஞாநாநு ஸந்தாநம் கூடும்; பிற்பட்டவர்கள் மயர்வற மதிநலம் பெற்றவர்களாகையாலே அஜ்ஞாநாநுஸந்தாநம் நைச்ய நிபந்தநமா மித்தனை.

**விளக்கம் -** இதன் காரணாமாக முதல் வகையைச் சார்ந்தவர்களிடம் (அஜ்ஞானம் உள்ளவர்கள், சக்தி அற்றவர்கள்) ஞானம் மற்றும் பக்தி என்பது குறைவாக இருந்து அறியாமை மட்டுமே அதிகமாகக் காணப்படும். இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (ஞானம் உள்ளவர்கள்) அறியாமை குறைவாகவும், பக்தி என்பது அளவுடன் காணப்பட்டு, ஞானமே அதிகமாக இருக்கும். மூன்றாவது வகையைச் சார்ந்தவர்களிடம் (பக்தி உள்ளவர்கள்) அறியாமை என்பது முகவும் குறைவாகவும், ஞானம் சற்றே குறைவாகவும், பக்தி என்பது கரைபுரண்டு ஓடும்படியும் காணப்படும். ஆகவே மூவரிடத்திலும் மூன்றும் உள்ளது என்றாலும், அவர்களிடம் எது குறைவாக உள்ளனவோ அவற்றைத் தள்ளி, அதிகமாக உள்ளதை மட்டுமே ப்ரபத்தியின் காரணமாக அருளிச்செய்தார்.

இப்படி நாம் பொருள் கொண்டால் சிறு தோஷம் இதில் உண்டு. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுக்கும் சற்று அறியாமை உள்ளது என்றாகிவிடும். ஆகவே இப்படிச் சமாதனம் அருளப்பட்டது. அதாவது, அவர்களிடம் மிகுதியாக என்ன உள்ளது என்பதைப் பற்றி மட்டுமே எண்ணும்போது, மேலே கூறப்பட்ட தோஷம் உண்டாகாது. ஆகவே இந்தச் சூர்ணைக்கு எவ்விதம் பொருள் கொள்ளவேண்டும் என்றால் - அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றின் நினைவும் முன்று விதமான அதிகாரிகளுக்கு ஏதேனும் ஒன்று அதிகமாகவும் மற்றவை குறைவாகவும் இருக்கும்; அந்த ஒன்று மட்டுமே இவர்களின் ப்ரபத்திக்குக் காரணமாக ஏன் கூறப்படுகிறது என்றால், அந்த ஒன்றில் மட்டுமே அந்தந்த அதிகாரிகளுக்கு மிகுந்த ஈடுபாடும் சிந்தனையும் உள்ளதால் ஆகும். அதாவது மற்ற புகலிடம் இல்லாமல் உள்ள ப்ரபந்நர்கள் என்பதற்கு இன்றியமையாத தன்மைகளான அறியாமை, ஆத்மஞானம், பகவத் பக்தி ஆகிய மூன்றுமே மூன்று விதமான அதிகாரிகளுக்கு உண்டு; ஆனால் இந்த மூன்றில் ஏதோ ஒன்று மட்டுமே அவர்கள் வேறு புகலிடம் இல்லாமல் பகவானிடம் ப்ரபத்தி செய்வதற்குக் காரணமாக அதிக நினைவுடன் எண்ணும்படி உள்ளது. இங்கு முதல் வகையைச் சார்ந்தவர்களுக்கு அறியாமையை எண்ணுதல் பொருந்தும்; இரண்டாம்

வகையைச் சார்ந்தவர்களுக்கு ப்ரமாணங்கள் மூலமாக பொருள் உணர்பவர்கள் என்பதால் அறியாமையின் வாசனை அடியுடன் நீங்குதல் என்பது இல்லாமையால் அறியாமையை எண்ணக்கூடும்; மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் என்பதால் அறியாமை உள்ளதாக எண்ணுதல், தாங்கள் வேறு புகல் இல்லாதவர்கள் என்று எண்ணுதல், இதனால் தங்களைத் தாழ்வாக எண்ணுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 34)

1-2-1 வீடுமின் முற்றவும் வீடு செய் தும் முயிர்
வீடுடை யானிடை வீடு செய்ம்மினே

**பொருள்** – உலகவிஷயங்களின் மீது இருக்கின்ற ஆசை முழுவதையும் கைவிடுங்கள். அப்படிச் செய்த பின்னர் உங்களுடைய உயிரைப் பரமபதத்தை உடையவனான எம்பெருமானிடம் சேர்த்துவிடுங்கள்.

**அவதாரிகை** – இதர விஷயங்களை விட்டு, உங்களுக்கு வகுத்த விஷயத்தைப் பற்றப் பாருங்கோள் என்கிறார்.

**விளக்கம்** – மற்ற விஷயங்களைக் கைவிட்டு, உங்களுக்காகவே இருக்கின்ற விஷயத்தைப் பிடிக்கப் பாருங்கள் என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - (வீடுமின்) "வீடுமின்" என்றொரு சொல்லாய்க் கிடக்கவுமாம்; விடுமின் என்றத்தை நீட்டி "வீடுமின்" என்று கிடக்கிறதாகவுமாம். முதலிலே "வீடுமின்" என்பானென் என்னில், சிறு ப்ரஜை, கையிலே ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு கிடந்தால், பொகட்டுக்கொடு நிற்கச் சொல்லி, பின்னை "ஸர்ப்பம்" என்பாரைப் போலேயும், ஒருவன் க்ருஹத்துக்குள்ளே கிடந்து உறங்கா

நிற்க, நெருப்புப் பற்றிப் புறம்பே எரியா நின்றால் "புறப்பட்டுக்கொள்கிடாய்" என்று பின்பு "நெருப்பு" என்பாரைப் போலவும், முந்துற "விடுங்கோள்" என்கிறார். ஜந்மமரணங்களுக்கு நடுவேயிறே இவை தான் நோவுபடுகிறது. த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச என்றும், பரித்யக்தா மயா லங்கா என்றும், விடுகை முன்னாகவிறே முன்பு பற்றினவர்களும் பற்றிற்று.

**விளக்கம்** – (வீடுமின்) – "வீடுமின்" என்பதை ஒரு பன்மையான சொல் என்று கூறலாம். அல்லது, "விடுமின்" என்பது நீட்டப்பட்டு "வீடுமின்" என்று உள்ளதாகக் கொள்ளலாம். முதலில் "வீடுமின்" என்பது ஏன்? ஒரு சிறு குழந்தைத் தனது கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டு நின்றால், அதனை முதலில் பாம்பைக் கீழே போடும்படிக் கூறிவிட்டு, அதன் பின்னர் "பாம்பு" என்று கூறுவர் (அப்போதுதான் அந்தக் குழந்தை பயப்படாமல் இருக்கும்). ஒருவன் தனது வீட்டிற்குள் உறங்கிகொண்டிருக்கும்போது வெளியில் நெருப்பு பிடித்தது என்றால், "வீட்டை விட்டு வெளியே வா", என்று கூறி, அவன் வெளியே வந்த பின்னரே "நெருப்பு" என்று கூறுவார்கள். இது போன்றே இவரும் முதலில், "விடுங்கோள்" என்கிறார். இவர் விடும்படியாகக் கூறும்விதமாக உயிர்களுக்கு இருக்கின்ற தீமை எது என்றால், பிறப்பு இறப்புக்கு நடுவே அல்லவோ இவை துன்பத்தில் உள்ளன! இராமாயணம் யுத்தகாண்டம் (17-4) - த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச – எனது புத்திரர்களையும் மனைவியையும் கைவிட்டு இராமனைச் சரணம் அடைகிறேன் - என்றும், யுத்தகண்டம் (19-5) - பரித்யக்தா மயா லங்கா – என்னால் விடப்பட்டது இலங்கை – என்றும் கூறுவது போன்று, விடுவது என்பதை அல்லவோ முதலில் பற்றினார்கள்?

**வ்யாக்யானம்** – "வீடுமின்" என்கிற பன்மையால் சொல்லுகிறது என்னென்னில்; ஒருவன் தாந்தனாய் வந்து நிற்க, அவனுக்கு உபதேசிக்கிறாரன்றே; ஸம்ஸார வெக்காயம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே ஒருவரல்லா ஒருவருக்காகிலும் ருசி பிறக்குமோ என்று எல்லார்க்கும் உபதேசிக்கிறார். எத்தை விடுவதென்னில் (முற்றவும்) சண்டாளர் இருப்பிடத்தை ப்ராஹ்மணர்க்கு ஆக்கும்போது சில கூட்டிச் சில கழித்தன்றே கொள்ளுவது; அப்படியே, அஹங்கார மமகாரங்களாலே தூஷிதமானவற்றிலே, சில கூட்டிக்கொள்ளவொண்ணாதே; ஆகையாலே கட்டடங்க விடுங்கோள் என்கிறார்.

**விளக்கம்** – ”வீடுமின்” என்று ஒரே சொல்லாகப் பன்மையில் கூறுவதன் கருத்து என்ன? அனைத்துப் புலன்களையும் வசப்படுத்திய ஒருவன் ஆழ்வார் முன்பாக வந்து நின்று கேட்க, அவனுக்கு மட்டும் இந்தப் பாசுரங்களை அவர் உபதேசிக்கவில்லை. ஸம்ஸாரவெப்பம் என்பது அனைவருக்கும் பொதுவாகவே இருப்பதால் யாராவது ஒருவருக்காவது பகவத் விஷயத்தின் மீது ருசி பிறக்குமோ என்ற ஆசையில் உபதேசிக்கிறார். எதனை விடுவது என்ற கேல்விக்கு விடை தருகிறார். (முற்றவும்) – சண்டாளர்களின் இடுப்பிடத்தை அந்தணர்களுக்கு ஆக்கும்போது அங்குள்ள சிலவற்றை எடுத்துக்கொள்வதும், சிலவற்றைக் கழித்துக்கொள்வதும் செய்யமாட்டார்கள். அது போன்று அஹங்காரம் மமகாரம் ஆகியவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்து, மற்றதை மட்டும் கைவிட இயலாது. ஆகவே அனைத்தையும் முழுவதுமாக விடுங்கள் என்கிறார்.

**வ்யாக்யானம் -** (வீடுசெய்து) ”வீடுமின் முற்றவும்” என்றாராகில், திரிய “வீடுசெய்து” என்கிற இதுக்குக் கருத்தென்னென்னில்; மேலொரு பேறு பெறுவதிலும் இவற்றை விட்டு நிற்கும் நிலைதானே பேறாகப் போருகையாலே, விடுகையாகிற பேற்றைப் பெற்று என் கிறபடி; ராஜபுத்ரன் அழுகுசிறையிலே கிடந்தால், முடிசூடி ராஜ்யம் பண்ணுவதிலும் சிறைவிடுகைதானே ப்ரயோஜநமாயிருக்குமிறே.

**விளக்கம்** – (வீடுசெய்து) -மேலே ”வீடுமின் முற்றமும்” என்று கூறி விட்டு, மறுமடியும் ”வீடுசெய்து” என்று கூறுவதன் கருத்து என்ன? ஓர் அரசகுமாரன் சிறையில் இருந்தான் என்றால், அவன் முடிசூடி அரசை நடத்துவதைவிட அந்தச் சிறையை விட்டு வெளியே வருவதே அவனுக்கு முதலில் பெரும் பயனாக இருக்கும் அல்லவோ? இது போன்று மோக்ஷம் என்னும் மேன்மை அடைவதைவிட உலக விஷயங்களை விடுதல் என்பது முதற்கண் பெரும்பேறாக இருக்கையால் அத்தகைய விடுதல் என்னும் பேற்றை அடைந்து – என்கிறார்.

**வ்யாக்யானம்** - (உம்முயிர் வீடுடையானிடை) இதுக்குப் பலபடியாக அருளிச்செய்வர். யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்கிறபடியே, உம் உயிரையும், அதினுடைய வீட்டையும் உடையவன் என்னுதல்; உம் உயிரை வீடாக உடையவன் என்னுதல்; உம் உயிரை விடுமிடத்தில் – ஸமர்ப்பிக்குமிடத்தில், உடையான் பக்கலிலே என்னுதல்; வீடுடையான் - பரமபதநிலயன் பக்கலிலே என்னுதல். (உம்முயிர்) அநித்யமான சரீரத்துக்கு நன்மை பார்க்கச் சொல்லுகிறேனோ? நித்யமான ஆத்ம வஸ்துவுக்கன்றோ நான் நன்மை பார்க்கச் சொல்லுகிறது; அது தானும் என்னுயிர்க்கோ? உம்முயிர்க்கன்றோ (உடையானிடை) பொதுவிலே உடையவன் என்கிறார். ருசி பிறந்து ”அவன் ஆர்” என்றால், ”வண்புகழ் நாரணன்” என்பாராக. அவன்

உடையவனாய் உங்கள் ஸத்தையை நோக்கிக் கொண்டு போரா நிற்க, நீங்களும் "நான், என்னது" என்று அகலப்பாராதே, உங்களை அவன் பக்கலிலே ஸமர்ப்பிக்கப் பாருங்கோள். அவன் உடையவனான பின்பு அவனோடு அவிவாதமே உங்களுக்கு வேண்டுவது.

**விளக்கம்** – (உம்முயிர்) – இதற்குப் பலவிதமாகப் பொருள் அருளிச்செய்வார்கள். ப்ருஹத் உபநிஷத் – யஸ்யாத்மா சரீரம்யஸ்ய ப்ருதிவீ சரீரம் , – யாருக்கு உயிர்கள் சரீரமோ, யாருக்கு உலகம் சரீரமோ – என்பது போன்று உன் உயிரையும் அதனுடைய வீடான சரீரத்தையும் கொண்டவன்; உனது உயிரைத் தனது சரீரமாகக் கொண்டவன்; உனது உயிரைச் சமர்ப்பிக்கும் இடத்தில் உடையவன்; பரமபதத்தை உடையவன் – என்று பல பொருள்கள் கூறுவர். (உம் உயிர்) – அழிந்து போகின்ற உடலுக்கு ஏற்ற நன்மையை நான் காணச் சொல்லவில்லை; நித்யமான ஆத்மாவுக்கு நன்மை தேடவே சொல்கிறேன். மேலும் எனது உயிருக்கா நான் நன்மை தேடும் வழியைக் கூறுகிறேன், உங்கள் உயிருக்கு அல்லவோ? (உடையானிடை) – பொதுவாக உடையவன் என்கிறான். இப்படி இவர் கூறுவதைக் கேட்டு ஆர்வம் எழுந்து ஆழ்வாரிடம், "அவன் யார்?", என்றால் அதற்கு ஆழ்வார் "வண்புகழ்நாரணன்" , என்பார். அவன் உடைமை கொண்டவனாக உங்களது ஆத்மாவையே பார்த்துக் கொண்டு நிற்கிறான். இதனைக் கண்ட பின்னரும் நீங்கள், "நான், எனது", என்று உங்கள் அஹங்காரம் மற்றும் மமகாரங்களால் அவனிடமிருந்து விலகிச் செல்ல முனையாமல், அவனிடம் உங்களைச் சமர்பிக்க முயலுங்கள். அவன் உடையவன் என்ற பின்னர், "அவன் நம்மை விட்டுச் சென்றாலும் நமக்கு எந்தப் பயனும் இல்லை, இழப்பும் இல்லை", என்று எண்ணாமல் இருப்பதே உங்களுக்கு வேண்டுவதாகும்.

**வ்யாக்யானம்** – யம: ப்ராதேசிகமான நியமநத்தை உடையவனை அன்று சொல்லுகிறது. ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: என்று அவன் தன்னையும் நியமிக்குமவனாயிற்று இவன். வைவஸ்வத: - விவஸ்வானுடைய குலத்திலே பிறந்தவனென்னுதல்; ஆதித்யாந்தர வஸ்திதனென்னுதல். ராஜா - அவனைப்போலே "தஹ பச" என்கையன்றிக்கே எல்லார்க்கும் இனியனாயிருக்குமவனாயிற்று இவன். ய: - அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளில் ப்ரஸித்தி. தவைஷ ஹ்ருதி ஸ்தித: - அவன் எங்குற்றான் என்ன, கண்டிலையோ? உன்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றிருக்கிறான். ஆனால் செய்ய வேண்டுவதென் என்னில் தேந சேதவிவாதஸ் தே - உடையவனாயிருக்கிறவனோடே உனக்கு அவிவாதமுண்டாகில் இத்தால் பேறு என் என்பாயோ, மா கங்காம் மா குரூந் கம: - ஒரு தீர்த்தம் தேடிப்போதல்,

புண்யக்ஷேத்ரம் தேடிப்போதல் செய்யவேண்டா; அஹங்கார மமகாரங்கள் கிடக்க ப்ராயசித்தம் பண்ணுகையாவது நிஷித்த த்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுக்கூட்டினவோபாதியிறே. உடையவனுக்கும் உடைமைக்கும் தக்கபடியிறே ப்ராயச்சித்தமும்; உடையவன் ஸர்வேச்வரன்; த்ரவ்யங்களில் ப்ரதாநமான ஆத்ம த்ரவ்யத்தையிறே அபஹரித்தது; அபஹரித்த த்ரவ்யத்தைப் பொகட்டு ப்ராயச்சித்தம் பண்ண வேணுமே. பொகடுகிற த்ரவ்யம் தானாகையாலே, ப்ராயச்சித்தம் பண்ணுகைக்கு வேறு அதிகாரியுமில்லையே. ஆகையாலே நீங்களும் உடையவன் பக்கலிலே வீடு செய்ம்மினே. வீடு - ஸமர்ப்பிக்கை; அதாகிறது - இசைகை.

**விளக்கம்** – மனுஸ்ம்ருதி – யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: தேந சேதவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம: - என்று கூறியதை இங்கு காண்போம். யம: - யமன் முதலானவர்கள் போன்று அந்தந்த ப்ரதேசத்தை மட்டுமே நியமிக்கும் அதிகாரம் உடையவனை ஆழ்வார் இங்கு கூறவில்லை. விஷ்ணுபுராணம் – ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: - என்னும்படி யமன் போன்றவர்களையும் நியமிப்பவனாக இவன் உள்ளான். வைவஸ்வத: - சூர்யமண்டலத்தில் இருந்து நியமிப்பவன் ஆவான். ராஜா – யமனைப் போன்று, “சுடு, பொசுக்கு”, என்று கூறாமல் அனைவருக்கும் இனியவனாக உள்ளான். ய: - அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் கூறப்பட்ட பெருமை உடையவனாக இருக்கிறான். தவைஷ ஹ்ருதி ஸ்தித: - இப்படிப்பட்டவன் எங்கே உள்ளான் என்றால், உனது மனதிலேயே உள்ளதைக் காணவில்லையா? உனது மனதிலே புகுந்து தொடர்ந்து ஆட்சி செய்வதையே தனக்கு நன்று என உள்ளான். அப்படிப்பட்ட அவனுக்கு நீ செய்ய வேண்டுவது என்ன? தேந சேதவிவாதஸ் தே - ”அவன் நம்மை விட்டுச் சென்றாலும் நமக்கு எந்தப் பயனும் இல்லை, இழப்பும் இல்லை”, என்று எண்ணாமல் இருந்தாலே போதுமானது. இப்படி எண்ணாமல் இருந்தால் கிட்டும் பேறு என்ன? மா கங்காம் மா குரூந் கம: - உயர்ந்த பேற்றினைத் தேடிப் புண்ணிய தீர்த்தங்களுக்கோ, புண்ணிய க்ஷேத்ரங்களுக்கோ செல்லவேண்டாம். “நான், எனது”, என்ற எண்ணங்கள் நிறைந்து இருக்கும்போது ப்ராயச்சித்தம் செய்தல் என்பது மிகவும் தாழ்ந்த பொருளை உள்ளே வைத்து வெளியே மெழுகு பூசுவது போன்றதாகும். ஒரு பொருளை உடையவனுக்கும், அந்த உடைமையான பொருளுக்கும் ஏற்றபடி ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். இங்கு உடையவன் ஸர்வேச்வரன்; உடைமையான பொருள் என்பது மிகவும் உயர்ந்த பொருளான ஆத்மாவாகும். இப்படிப்பட்ட உயர்ந்த ஆத்மாவை அல்லவோ அஹங்காரத்தால் அபகரித்தது? அப்படி அபஹரித்த ஆத்மாவின் பொருட்டு ப்ராயச்சித்தம்

செய்யவேண்டும். ஆனால் அபஹரிக்கபட்ட ஆத்மா தானாகவே உள்ளபோது ப்ராயச்சித்தம் செய்வதற்கு வேறு அதிகாரி யாரும் இல்லை. எனவே நீங்களே உங்கள் ஆத்மாவை உடையவனிடம் இசைந்து சமர்ப்பணம் செய்யுங்கள்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 57)

42. பழுது இலா ஒழுகல் ஆற்றுப் பல சதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலும் எம் அடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின் என்று நின்னொடும் ஒக்க
வழிபட அருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே.

**பொருள்** – அழகியமணவாளா! ”நான்முகன் தொடக்கமாக உங்கள் வரை தொடர்ந்து வருகின்ற பரம்பரையில் எந்தவிதமான தோஷங்களும் இல்லாத நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்கின்றவர்களே! எமக்கு அடிமைத்தனம் செய்கின்றவர்கள் மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் நீங்கள் அவர்களை வணங்கவேண்டும். உங்களது ஞானத்தை அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். அவர்களிடம் நீங்கள் பல விசேஷங்களைக் கேட்டு அறியலாம்”, என்று அருளிச்செய்தாய். மேலும், அவர்களை உனக்குச் சமமாக ஆராதிக்கும்படிக் கூறினாய் அல்லவோ?

**அவதாரிகை** – ஜந்ம வ்ருத்தாதிகளில் குறையநின்ற இந்த ஜ்ஞாநமுடையவர்கள், இந்த ஜ்ஞானவிதுரராய் ஜன்மவ்ருத்தாதிகளால் உயர்ந்தவர்களுக்கு ஸர்வேச்வரனோபாதி பூஜ்யராய் ஜ்ஞாந தான ப்ரதிக்ரஹ ஸம்வ்யவஹாரங்களுக்கும் அர்ஹராவர் என்கிறார்.

**விளக்கம்** – தங்களது பிறப்பு மற்றும் நடத்தை ஆகியவற்றால் தாழ்ந்தவர்களாக இருந்தாலும் பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஆழ்பொருளை அறிந்தவர்கள், இத்தகைய ஞானம் இல்லாமல் உயர்ந்த பிறவி மற்றும் நடத்தை கொண்டவர்களால் ஸர்வேச்வரனுக்கு நிகராக வைத்து பூஜிக்கப்பட வேண்டியவர்கள் என்கிறார். மேலும் தங்களிடம் ஞானத்தை அளிப்பது, தங்களிடமிருந்து ஞானத்தைப் பெறுவது போன்ற செயல்களுக்கும் தகுதியானவர்கள் என்கிறார்.

**வ்யாக்யானம்** – (பழுதிலா ஒழுகலாற்று) – ப்ரஹ்மா தொடங்கித் தங்களளவும் வர நெடுகிப்போருகிற வம்சப்ரவாஹத்திலே ஒரு தோஷமின்றிக்கேயிருக்குமவர்கள். அதாகிறது, உத்பத்திகளிலேயாதல், ஆசாராதிகளிலேயாதல், ஒருவகையாலும் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியின்றிக்கேயிருக்கை. (பலசதுப்பேதிமார்கள்) – இவ்வம்சத்தில் சதுர்வேதிகளாயிருப்பார் அநேகரென்கை. சதுர்வேதா ருஷய: என்கிறபடியே ரிஷி ஸமராயிருக்கை. "சதுப்பேதிமார்கள்" என்று ஸம்போதநை. ஒழுகல் – நெடுமை, ஆறு – வழி. (இழிகுலத்தவர்களேலும்) – இதில் கீழ்ப்பட்டதில்லையென்னும் நிஹீந குலத்தில் பிறந்தவர்களேயாகிலும். (ஏலும்) – பஹூநாம் ஜந்மநாமந்தே என்கிறபடியே அநேக புண்ய ஜந்மங்களினுடைய அவஸாநத்திலே ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்குமென்று சொல்லுகையாலே ஜ்ஞாநாதிகராயிருப்பார்க்கு நிஹீந ஜந்மம் கூடாது; விதுர தர்ம வ்யாதாதிகளைப்போலே கூடிற்றேயாகிலும். (எம்மடியார்களாகில்) – என்னோட்டை அஸாதாரண பந்தத்தை அறிந்து, ஜ்ஞாநாநுகூலமான ஸ்வாசாரத்தை உடையராகில். கைங்கர்யமே எல்லா நன்மைகளுமாக நினைத்திருக்குமவர்களாய், ஈச்வரனும் "இவர்கள் திறத்தில் நாமே இவர்களுக்கு உபாயோபேயங்களும் எல்லாவுறவும்" என்று நினைத்திருக்கப்படுமவர்கள்.

**விளக்கம்** - (பழுதிலா ஒழுகலாற்று) – நான்முகன் தொடக்கமாகத் தங்கள் வரையுள்ள நீண்ட பரம்பரையில் ஒருவர்கூட தோஷம் உள்ளவர்கள் என்று கூற இயலாதபடி உள்ளவர்கள். அதாவது பிறப்பு, ஒழுக்கம் போன்ற எந்த ஒன்றிலும் ப்ராஹ்மண்யம் விலகாமல் உள்ளவர்கள். (பலசதுப்பேதிமார்கள்) – இப்படியாக உள்ள பரம்பரையில் நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்பவர்கள் பலர் உள்ளனர் என்று கருத்து. சதுர்வேதா ருஷய: - ரிஷிகள் நான்கு வேதங்களும் அத்யயனம் செய்பவர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப இவர்கள் ரிஷிகளுக்கு சமமாக உள்ளவர்கள். ஒழுகல் என்றால் நெடுமை, ஆறு என்றால் மார்க்கம் என்று பொருள். (இழிகுலத்தவர்களேலும்) – ஒரு சிலர் "இதனைக் காட்டிலும் தாழ்ந்த பிறவியே இருக்கமுடியாது" என்று கூறும்படியான தாழ்ந்த பிறவியில் பிறந்தாலும். (ஏலும்) – கீதை (7-19) - பஹூநாம் ஜந்மநாமந்தே – பல பிறவிகளுக்குப் பின்னரே – என்று கூறுவதற்கு ஏற்ப புண்ணியம் நிறைந்த பல பிறவிகள் எடுத்த பின்னர் மட்டுமே ஒருவனுக்குத் தனது ஸ்வரூப ஞானம் பிறக்கும். ஆகவே பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஞானம் கொண்டவர்களுக்குத் தாழ்ந்த பிறவி அமையாது. ஆயினும் ஒரு சிலருக்கு விதுரன், தர்மவ்யாதன் போன்றவர்கள் போன்று தாழ்ந்த பிறவி அமைந்துவிட்டாலும். (எம்மடியார்களாகில்) – என்னுடனான உறவுமுறையை அறிந்து கொண்டு, அத்தகைய ஞானத்திற்கு ஏற்றபடி வாழ்ந்து, எனக்குச் செய்யும் கைங்கர்யம் மட்டுமே தங்களது வாழ்வின் அனைத்து நன்மை என்று எண்ணியபடி இருக்கக்கூடும். இவர்கள் விஷயத்தில் அழகியமணவாளன், "இவர்களைப்

பொறுத்தவரை நாமே இவர்களுக்கு உபாயமாகவும், உபேயமாகவும் இருப்போம்”, என்று எண்ணும்படியாக உள்ளவர்கள்.

**வ்யாக்யானம்** – (தொழுமின் நீர்) – நீங்கள் தொழுங்கள். ஏத ஏவ ஸதாம் தம: என்கிறபடியே உங்களுடைய வித்யாவ்ருத்தங்களும், ஜந்மோத்கர்ஷங்களும், மத ஹேதுவாகையன்றியே தம ஹேதுவென்றிருக்கும் நீங்கள் அவர்கள் காலிலே விழுங்கோள். காலேஷ்வபி ச ஸர்வேஷு இத்யாதிகளில் சொல்லுகிறபடியே பகவத் ப்ரஸாதமொழிந்த ஸாதநாந்தரங்கள் பயஸ்தாநமென்றிருக்கும் நீங்கள் அவர்களை ஆராதியுங்கோள். பரஸ்பர நீசபாவை: என்கிறபடியே ஸ்வரூப ப்ராப்தமான நீசபாவமானது அவர்களுக்கு ஸ்வரூப ஸித்தம்; உங்களுக்கு துர்மாநத்தாலே துஷ்கரம்; அவர்களைத் தொழவே உங்கள் ஸம்ஸார பீஜமான துர்மானம் போம்; நிஹீந ஜந்மத்திலே பிறந்தவன் ப்ராஹ்மணனுக்கு ரக்ஷகனாக எங்கே கண்டோமென்னில் கைசிக ஸம்பந்தம் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியாலே வந்த ப்ரஹ்மராக்ஷஸத்வத்தை ப்ராஹ்மணனுக்குப் போக்கிக் கொடுக்கக் கண்டோமிறே. (கொடுமின் கொண்மின்) – அவர்கள் உங்கள் பக்கல் ஒரு ஜ்ஞாநாபேக்ஷை பண்ணில், நீங்கள் ஆதரித்துச் சொல்லுங்கோள்; அவர்கள் பகவத் ஜ்ஞாநத்தை உங்களுக்கு ப்ரஸாதிக்கில் கேட்டு க்ருதார்த்தராகுங்கோள். ஜாதி நிபந்தநமான ஸம்பந்தம் போலேயாதல், குண நிபந்தநமான ஸம்பந்தம் போலேயாதல்; நீர் மேலெழுத்தான ஸம்பந்தமின்றிறே இவர்களோடு பண்ணும் ஸம்பந்தம்; இது யாவதாத்மபாவியான ஸம்பந்தமிறே.

**விளக்கம்** - (தொழுமின் நீர்) – நீங்கள் தொழுவீர்களாக. ஏத ஏவ ஸதாம் தம: - அடக்கமாக உள்ளதற்குக் காரணம் – என்று கூறுவது போன்று, உங்களது கல்வி, பிறப்பு மற்றும் ஒழுக்கம் மூலமாக வரும் மேன்மை போன்றவை உங்களது கர்வத்திற்குக் காரணமாகிவிடக் கூடாது; இவை உங்களது அடக்கத்திற்குக் காரணமாக வேண்டுமென்றால் நீங்கள் எமது அடியார்களின் கால்களில் விழுவீர்களாக. ஜிதந்தே ஸ்தோத்ரம் - காலேஷ்வபி ச ஸர்வேஷு – அனைத்து காலங்களிலும் – என்று கூறும் வரிகளின்படி, அழகியமணவாளனின் க்ருபை மட்டுமே அபயம் அளிப்பதாகும்; மற்ற அனைத்து உபாயங்களும் அச்சத்தையே விளைவிக்கும் என்று அறிந்து நீங்கள் அவர்களை ஆராதிப்பீர்களாக. ஸ்ரீவைகுண்டஸ்தவம் - பரஸ்பர நீசபாவை: - ஒருவருக்கொருவர் அடிமைகளாக இருப்பதை விரும்புபவர்கள் – என்று கூறுவது போன்று, ஆத்மஸ்வரூபத்திற்கு இயல்பான அடிமைத்தனம் என்பது அவர்களுக்கு இயல்பாகவே உள்ளது; ஆனால் உங்களுக்கு உங்கள் பிறவி முதலானவற்றின் காரணமாக அத்தகைய அடிமைத்தனம் பற்றிய சிந்தனை கூட உண்டாவது கடினமே ஆகும். நீங்கள் அவர்களைச் சென்று தொழுதால், உங்களது பிறப்பிலே உண்டாகின்ற கர்வம் உள்ளிட்டவை விலகிவிடும். தாழ்ந்த பிறவியில் பிறந்த ஒருவன் அந்தணனனுக்கு

பாதுகாப்பு அளிப்பவனாக உள்ள நிலையை எங்கே காணலாம் என்னும் கேள்வி எழக்கூடும். கைசிகபுராணத்தில் காணலாம். அந்தணன் ஒருவனின் அந்தணத்தன்மை விலகியதால் உண்டான ப்ரஹ்மரக்ஷஸ் என்னும் தன்மை, நம்பாடுவான் என்னும் தாழ்ந்த பிறவி கொண்டவனால் நீங்கியதைக் காணலாம். (கொடுமின் கொண்மின்) – அப்படிப்பட்டவர்கள் உங்களிடமிருந்து ஞானம் பெறவேண்டும் என்று வந்தால் அவர்களுக்கு ஞானம் அளிப்பீர்களாக. அவர்கள் உங்களுக்கு எம்பெருமானைப் பற்றிக் கூற வந்தால், அதனைக் கேட்டு பேறு பெறுங்கள். ஒத்த பிறப்பு மூலம் மட்டுமே ஒருவருக்கொருவர் ஞானம் போன்றவற்றைப் பரிமாறுதல், ஒத்த குணங்கள் மூலம் மட்டுமே ஒருவருக்கொருவர் ஞானம் போன்றவற்றைப் பரிமாறுதல் ஆகியவை நீர் மீது எழுதிய எழுத்துக்கள் போன்று நிலையற்றவை ஆகும். பாசுரம் 38-இல் கூறப்பட்ட ஞானம் கொண்டவர்களுடன் கொள்ளும் தொடர்பு என்பது இது போன்றதல்ல, இந்த சரீரம் விழுந்த பின்னரும் தொடருவதாக அமையும்.

**வ்யாக்யானம்** – (என்று நின்னோடுமொக்க வழிபட அருளினாய்போல்) – இப்பசுரம் பலப்ரதரான தேவரீரே அருளிச்செய்த பின்பு இதிலொரு ஸம்சயமுண்டோ? (என்று நின்னோடுமொக்க வழிபட) – எனக்கு மேல் பூஜ்யரில்லாமையாலே என்மாத்ரமாகிலும் அவர்களை ஆராதித்து நல்வழி போங்கோள். (அருளினாய்) – பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்ச அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம் என்கிறபடியே. (அருளினாய்) – இந்த ரஹஸ்யம் தேவரீர் க்ருபையாலே அருளிச்செய்தவித்தனையிறே. "பூசித்து நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே" என்று பகவத் ஸம்பந்த யுக்தருடைய பாவநத்வம் நித்யஸூரிகளும் தந்தாமுடைய அபிமத விஷயங்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணினார்களாய் உபதேசிக்குமத்தனையிறே. (போல்) – அதுபோலே, திருமுகப்பாசுரம் வராஹ நாயனாரது; படியெடுத்தார் இவ்வாழ்வார். திருமுகப்பாசுரம் கேட்டருளி அத்தை அர்த்த க்ரியாகாரியாக்கினார் பெரியபெருமாள். கேட்டருளுகையாவது அகஸ்த்யனைக் கொண்டு பெருமாள் ஸ்ரீராமாயணம் கேட்டருளினாற்போலே. (மதிள் திருவரங்கத்தானே) – உபதேசமாத்ரமேயாய்ப் போகாமே, கோயிலிலே வந்து லோகஸாரங்க மஹாமுனிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை வ்யாபரித்துக் காட்டிற்றிலீரோ? (மதிள் திருவரங்கத்தானே) – கோயிலில் மதிளைக் கடக்கிலன்றோ தேவரீர் காட்டின இம்மர்யாதைடைக் கடக்கலாவது.

**விளக்கம்** - (என்று நின்னோடுமொக்க வழிபட அருளினாய்போல்) – அழகியமணவாளா! மோக்ஷத்தை அளிக்கவல்ல நீயே இந்தப் பாசுரத்தின் பொருளை இதுவரை அருளிச் செய்த பின்னர் வேறு என்ன ஐயம் உள்ளது? (என்று

நின்னோடுமொக்க வழிபட) – எனக்கு மேல் வழிபடத்தக்கவர் யாரும் இல்லை. ஆகவே என்னை வணங்குவதாகவே எண்ணி அவர்களை ஆராதனை செய்து, நல்வழியில் செல்லுங்கள். (அருளினாய்) – கருடபுராணத்தில் - பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்ச அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம் – என்னிடம் எட்டுவிதமான பக்தி யாரிடம் உள்ளதோ அவன் மிலேச்சனாக இருந்தாலும் அந்தணர்களைக் காட்டிலும் உயர்ந்தவன், முனிவன், செல்வம் படைத்தவன், பண்டிதன்; அவனிடமிருந்து ஞானம் பெற இயலும்; என்னைப் போன்றே அவனும் வணங்கத்தக்கவன் – என்றது காண்க. (அருளினாய்) – இப்படிப்பட்ட உயர்ந்த ரஹஸ்யத்தை உனது கருணையால் நீ எங்களுக்கு அருளிச்செய்தாய் அல்லவோ? திருவாய்மொழி (7-10-11) - பூசித்து நல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே – என்னும்படி அழகியமணவாளனின் அடியார்கள் குறித்து நித்யஸூரிகள் தங்களது துணைவிகளுக்கு மிகவும் அரிதான உபதேசம் போன்று உரைப்பர். (போல்) – இந்தப் பொருளை முதலில் அருளிச்செய்தவன் வராஹன்; அதனைத் தனது பாசுரம் மூலம் இவ்வாழ்வார் அருளிச்செய்தார்; இந்தப் பாசுரத்தைத் தன் திருமுன்பே ஆழ்வார் விண்ணப்பிக்க, இதனைப் பெரியபெருமாள் நடத்திக் காட்டினான். அகஸ்த்யன் மூலம் இராமன் இராமாயணம் கேட்டது போன்று, இங்கு தான் உரைத்தவற்றை ஆழ்வார் முலமாக அழகியமணவாளன் கேட்டு உகந்தான். (மதிள் திருவரங்கத்தானே) – தான் கூறியதை வெறும் உபதேசம் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது என்று, திருவரங்கம் பெரியகோயிலில் உயர்ந்த முனிவரான லோகசாரங்கன் என்பவரைத் திருப்பாணாழ்வாரைத் தோளிலே தூக்கி வரச்செய்து, செய்கையாலும் உணர்த்தினான். (மதிள் திருவரங்கத்தானே) – உனது திருக்கோயிலின் மதிளைத் தாண்ட இயன்றால் அல்லவோ, நீ உரைத்த இந்த உபதேசத்தை மீற இயலும்?

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்